# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 4/2013</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 10.02.2023**

**பெயர் - நந்தினி**

**க/பெ - ராஜேந்திரன்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.28 p.m.**

**<u>பிரதிவாதிகள் 8 மற்றும் 9 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>-**

9. வாசா ஆ 1 ன் சான்றிட்ட நகலை யார் பெற்றது என்றால் எனக்கு தெரியாது. ஜே.பி. கண்ணன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர் எனது பெரியப்பா மகன். வாசா ஆ 1ன் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முயற்சித்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அசல் பத்திரம் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். மேற்படி அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் என்னால் கூற இயலாது. நான் அசல் பத்திரத்தை என்னிடமே வைத்துக்கொண்டு எந்த காரணமும் கூறாமல் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததை நீதிமன்றம் ஏற்க்கொள்ள கூடாது என்றால் சரியல்ல. வாசா ஆ 1 பத்திரம் 1956ல் எழுதப்பட்டுள்ளது என்றும் அந்த காலகட்டத்தில் எனது தாத்தா கந்தசாமி உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். மேற்படி எனது தாத்தா கந்தசாமி நாயுடு காலகட்டத்தில் அவர் தான் எனது குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு நிர்வகித்து வந்த நிலையில் மேற்படி கூட்டு குடும்ப பணத்தில் வாங்கிய சொத்து தான் வாசா ஆ 1ல் கண்ட சொத்து என்றால் சரிதான். எனவே வாசா ஆ 1ன் கீழ் அடங்கிய சொத்து கந்தசாமி நாயுடு மற்றும் 4 பிள்ளைகள் அடங்கிய ஏக குடும்ப சொத்து என்றால் சரிதான். மேற்படி எங்கள் ஏக குடும்பத்திற்கு பல சொத்துக்கள் இருந்து அந்த சொத்துக்களில் பெறப்பட்ட வருமாணத்தை கொண்டுதான் வாசா ஆ 1 சொத்து வாங்கப்பட்டது என்றால் அதை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அந்த கால கட்டத்தில் கந்தசாமி நாயுடு மற்றும் அவரது மகன்கள் நால்வரும் கூட்டாக விவசாயம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி குடும்பத்தை கந்தசாமி நாயுடு நிர்வகித்துவந்த நிலையியல் அவர் சொல்படி மற்ற குடும்ப உறுப்பினர்கள் நடந்துகொள்வர் என்றால் சரிதான். வாசா ஆ 1ல் 5.51 ஏக்கர்

விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான். இதில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது எவ்வளவு ஏக்கர் என்றால் 1.53 ஏக்கர் ஆகும். மேற்படி 1.53 ஏக்கர் போக 5.51 ஏக்கரில் மீதமுள்ள நிலங்கள் என்ன ஆனது என்றும் அதற்கு ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கேள்விக்கு 3ம் வாதியான கிருஷ்ணமூர்த்தி நாயுடுக்கு தான் விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி அனைத்து விவரங்களும் தெரிந்த கிருஷ்ணமூர்த்தி மற்றும் என்னைவிட மூத்த வாதிகளை விசாரணை மேற்கொண்டால் பல உண்மைகளை ஒப்புக்கொள்ளவேண்டிவரும் என்பதால் அவரை விசாரணை செய்யாமல் நான் விசாரிக்கப்படுகிறேன் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 01.48 p.m.**